**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**P202 சமயத்தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. எட்டுத்தொகையில் சிவனைக் குறிக்கப் பயன்பட்ட இரண்டு தொடர்களைக் கூறுக.
2. பஞ்சபுராணம் என்பவை யாவை?
3. திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு அழகிய தொடர்களைக் கூறுக.
4. திருவருட்பாவின் ஆசிரியர் யார்? அது கூறும் இறையிலக்கணம் யாது?
5. கூர்மம், வராகம் ஆகியவற்றின் பொருள் தருக.
6. ஆழ்வார்களுள் திருமாலைப் பாடாதவர் யார்?
7. வைணவ உரையில் 'படி' என்ற சொல்லின் பொருள் யாது?
8. சித்திரகவி எனப்படும் யாப்பு வடிவம் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?
9. தீர்த்தங்கரர் என்பதன் பொருள் யாது?
10. பௌத்த சமயக்கோட்பாடுகளை விரிவாகப் பேசும் காப்பியங்கள் யாவை?
11. பௌத்த சமயத்தின் பெரும் பிரிவுகள் யாவை?
12. இயேசுவைப் பற்றி பிற சமயக் கவிஞர்கள் இயற்றியுள்ள நூல்களைக் குறிப்பிடுக.
13. கிறித்துவச் சிற்றிலக்கிய முன்னோடிகள் இருவரைக் குறிப்பிடுக.
14. இஸ்லாமியக் கலைக்களஞ்சியத்தின் மூன்று தொகுதிகளையும் உருவாக்கியவர் யார்?

15. சிலேடையைச் சமய நல்லிணக்கத்துக்காகப் பயன்படுத்திய இஸ்லாமியப் புலவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. முப்பெரும் புராணங்கள் பற்றி எழுதுக.
2. தேவாரத் தொகுப்பில் 'பண்முறை' 'தலைமுறை' என்பன யாவை?
3. திருமாலின் பத்து அவதாரங்களை எழுதுக.
4. வைணவப் புலவர்கள் இயற்றிய இலக்கண நூல்கள் யாவை?
5. சமண வழிபாடு பற்றி விவரி?
6. பௌத்த சமய அறநெறிக் கோட்பாடுகளில் ஐந்து சீலக்கோட்பாடுகளை எழுதுக.
7. 'கல்லறைப் பூக்கள்' புதினத்தில் உணர்த்தப்படும் சமூக சீர்திருத்தத்தை எழுதுக.
8. மிகுராசு மாலை – நூற்குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பன்னிரு திருமுறைகளுள் தேவாரத் திருவாசகங்களுக்குரிய இடத்தை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தில் நம்மாழ்வார் பாடல்களின் இறைத்தன்மையை விளக்குக.

2. (அ) சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் சமணசமயக் கொள்கைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மணிமேகலை கூறும் பௌத்தச் சமயக் கோட்பாடுகளைப் புலப்படுத்துக.

3. (அ) கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் பற்றி கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) இஸ்லாமியச் சமயக் கருத்துகளும் சடங்குகளும் பற்றி விளக்கியுரைக்க.

❋ ❋ ❋